[1989 பிப்ரவரி 20

(ஆ) அறந்தாங்கிப் பகுதியில் காலரா நோயால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

* திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில், அறந்தாங்கிப் பகுதியில் கடும் குடிநீர்ப் பஞ்சத்தின் காரணமாகவும் வறட்சியாலும் 'காலரா' நோய் பரவி, பலபேர் இறந்திருக்கிறார்கள். பலர் பல்வேறு மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தகவலை அரசுக்குத் தெரிவித்து அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேட்டேன். அதையொட்டித் தாங்களும் அரசின் சார்பில் அறிக்கை ஒன்றை வைக்கச் சொன்னீர்கள். அந்த அறிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏறத்தாழ 6 லட்சம் குத்தகை விவசாயிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு செய்தியைக் குறித்து வினா எழுப்பியிருக்கிறார்கள். அதற்கான விடையை அறிந்த பிறகு, அடுத்த செய்திக்குப் போவதுதானே முறையாக இருக்கும். அருள் கூர்ந்து உட்காருங்கள்.

* மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் எழுப்பிய சந்தேகத்தின்பேரில், புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய மருத்துவ அதிகாரிகள் விசாரிக்கப்பட்டார்கள். அவர்கள் கொடுத்துள்ள தகவலை இந்த அவையின் முன் வைக்கிறேன்.

"புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி மருத்துவ மனையில் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15 ஆம் நாள் முதல் 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19 ஆம் நாள் வரையான காலத்தில் 44 பேர்கள் 'காலராவாக' இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் வைத்தியம் செய்யப்பட்டார்கள். அதில், பதினைந்து பேர்கள் மட்டும் இன்னும் மருத்துவ மனையிலேயே இருக்கிறார்கள். அது 'காலராவா' என்பதை முடிவு செய்வதற்காக அதற்

1989 பிப்ரவரி 20] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

சூரிய சோதனைக்காக கிங் இன்ஸ்டிட்யூட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது திரும்ப வருவதற்கு 5 நாட்கள் ஆகும் என்ற அடிப்படையில் அது காலரா தானா என்று முடிவெடுப்பதற்கு முடியவில்லை.".

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலை காரணமாக எத்தனை பேர் மருத்துவ மனைகளிலும், கிராமங்களிலும் இறந்திருக்கிறார்கள் என்கிற தகவல் பெறப்பட்டிருக்கிறதா? இன்னும் 5 நாட்கள் கழித்து முடிவு தெரிந்த பிறகு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், ஏற்கெனவே அந்தப் பகுதியில் அது காலராதான் என்ற பயமும், பீதியும் மக்களிடத்தில் இருக்கிற காரணத்தால்—ஏனென்றால் இரண்டொரு கிராமத்தில் இருந்தோ அல்லது அறந்தாங்கியில் ஒரு தெருவிலிருந்தோ இந்த 45 பேரும் அனுமதிக்கப்படவில்லை, பல கிராமங்களிலிருந்து வயிற்றுப் போக்கால் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது காலராதான் என்று அந்தப் பீதி பெரிய அளவில் அந்தப் பகுதியிலும் இன்னும் மற்ற பகுதிகளிலும் பரவி இருக்கிறது, எனவே—அரசின் சார்பில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதால் மருத்துவர் குழு ஒன்று அங்கே மருந்துகளோடு அனுப்பி வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி குறித்து நானும் நேற்று சம்பந்தப்பட்ட மருத்துவமனை அதிகாரியோடு பேசினேன். அதனடிப்படையில் நான் குறிப்பிட்ட செய்தி, "காலராதானா என்று உறுதி செய்யத்தான் 5 நாட்களாகும்" என்றேனே தவிர நடவடிக்கை எடுக்க 5 நாட்களாகும் என்று சொல்லவில்லை என்பதைத் தெரிவித்து, ஏற்கெனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இருக்கிற மருத்துவர்கள் அனைவரும் அந்தப் பகுதிக்குச் சென்றிருக்கிறார்கள். அதற்குக் காரணமான நீர் போன்றவற்றைப் பரிசோதனைக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, இப்போதே தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் இப்போதைக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இதனால் எத்தனைபேர் இறந் திருக்கிறார்கள் என்ற செய்தி பெறப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து ஒன்றைக் கவனிக்க வேண்டும். இப்படி விவரம் கேட்டால், 'தனிக் கேள்வி போடுங்கள்' என்றுதான் சொல்ல வேண்டி வரும். இப்படி நேருக்கு நேர் கேள்வி கேட்டு, உடனுக்குடன் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை சொல்வது என்பது சாத்தியமில்லை. தாங்கள் நிலைமையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறீர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு விரைவில் நடவடிக்கை மேற்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இறந்ததாகத் தகவல் ஏதும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) குத்தகை பாக்கிக்காக விவசாயிகள் நிலத்திலிருந்து வெளி யேற்றப்படும் நிலை.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தங்கள் மூலமாக அரசாங்கத்திடமிருந்து ஒரு விவரத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இருந்த அரசு, 4 லட்சத்திற்கும் மேற்பட்ட குத்தகை விவசாயிகளின் பிரச் சினைக்குத் தீர்வு காணாமல் ஒத்திப்போட்டு, ஒத்திபோட்டு வந்த தன் காரணமாக, தற்போது 50,000-க்கும் மேற்பட்ட குத்தகை விவசாயிகளின் மீதான வழக்குகள் ரெவின்யூ கோர்ட்டில் இருந்து வருகின்றன. ஆனால் என்ன காரணத்தாலோ இப்போது திடீ ரென்று குத்தகை விவசாயிகளை நிலத்திலிருந்து எவிக்ஷன் என் கின்ற முறையில் வெளியேற்றுகிறார்கள். அப்படி வெளியேற்று வதன் மூலமாக ஒரு தவறான எண்ணத்தை இந்த அரசின்மீது உண்டாக்க முயற்சிக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. எனவே, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே விவசாயி களின் இந்தப் பிரச்சினையைத் தீர்த்தால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். குத்தகை பாக்கியை எப்படித் தீர்ப்பது என் பதைப் பின்னால் பார்த்துக் கொண்டாலும், நிலத்திலிருந்து அவர்களைத் தற்போது வெளியேற்றுவதை உடனடியாகத் தடை செய்து அரசு அறிவிக்க முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

1939 பிப்ரவரி 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. விரையன் அவர்களும் மற்றும் சில உறுப்பினர்களும் எழுப்பிய இந்தப் பிரச்சினை மீது அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. நல்லதொரு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. குத்தகை கட்டுவதைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றாலும் கூட இந்த வழக்குகள் சம்பந்தப்பட்ட வரைக்கும் அவைகளை மேற்கொண்டு தொடராமல் குத்தகை விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-10)

(ஆ) அறந்தாங்கிப் பகுதியில் காலரா நோயால் ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை நான் எழுப்பியபோது சிலபேர் அங்கே இறந்து போயிருக்கிறார்கள் என்று எனக்குக் கிடைத்த தகவலைச் சொன்னேன். (குறுக்கீடு) முதல் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் ஒத்துழைத்தால் மற்ற உறுப்பினர்கள் வேறு பிரச்சினைகளை எழுப்புவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் ஒரு பிரச்சினை கிளப்பப்பட்டு, அது முடிவுற்று அதற்கு பிறகு வேறு ஒரு பிரச்சினைக்குப் போய் அதற்கு மாண்புமிகு முதல்வர் பதில் சொன்னதற்குப் பிறகு, 'ரெட்டி ஒச்சி, முதல் ஒச்சி' என்பது மாதிரி மறுபடியும் முதல் சப்ஜெக்டிற்கே போவது நியாயமல்ல, முறையல்ல. அதைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை முடிந்தவுடனே நான் எழுந்தேன். எதிர்க்கட்சியின் இன்னொரு முக்கிய தலைவர் ஒரு பிரச்சினையை எழுப்புகிறார், நீங்கள் உட்காருங்கள் என்று தாங்கள் சொன்னதால்தான் உட்

கார்ந்தேன். எனவே இதிலே சட்டப் பிரச்சினை எதுவுமில்லை. உயிர்ப் பிரச்சினை என்பதால் திரும்பவும் சொல்கிறேன். பலபேர் இறந்ததாகத் தகவல் என்று நான் சொன்னேன். அதுபோன்ற தகவல் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தகவல் இல்லையென்றால் யாரும் இறக்கவில்லையென்று சொல்லப் பட்டிருக்கிறதா ? அதுபற்றி நீங்கள் கேட்டீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து நான் மேலும் விவாதங்களை அனுமதிக்கப்போவதில்லை. ஏனென்று கேட்டால் நீங்கள் நேருக்கு நேர் கேட்டு ஓர் அமைச்சர் முழுமையாகப் பதில் சொல்வதென்பது சாத்தியமாகாது. உங்களுடைய முழு எண்ணமும் புரிகிறது. அவையின் கவனத்திற்குக்கொண்டு வந்த பிறகு இதில் தக்க நடவடிக்கையெடுக்குமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் அமர வேண்டுகிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, அறந்தாங்கி பகுதியில் இருக்கும் காலரா பற்றிப் பேசினார்கள். அறந்தாங்கிக்குப் பக்கத்தில்தான் பேராவூரணி இருக்கிறது. எனவே அறந்தாங்கியிலிருந்த காலரா பேராவூரணிக்கு வராமல் தயவுசெய்து முன் கூட்டியே திட்டமிட்டு நடவடிக்கையெடுத்து, பேராவூரணி பகுதி பகுதி மக்களைக் காப்பாற்ற முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களின் மிகப் பெரிய ஆர்வத்தைப் பாராட்டி, இது பேராவூரணி வரைக்கும் வராமல் தடுக்கக் கண்டிப்பாக ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவல் அவைக்கு வரக்கூடாது என்பதற்காக நான் திரும்பவும் சொல்கிறேன். பலபேர் இறந்து போயிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே மக்கள் பீதியாக இருக்கிறார்கள். எனவே யாரும் சாகவில்லையென்ற தகவல் இங்கேயிருந்து போகுமானால், பத்திரிகைகளில் வருமானால், அது அரசுக்குத்தான் கெட்ட பெயரை உருவாக்கும். காரணம் அங்கே மக்கள் இறந்திருக்கிறார்கள். அது பற்றிக்கேட்டீர்களா, இல்லையா ?

1989 பிப்ரவரி 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது யாரும் இறந்துபோக வில்லையென்று சொல்லவில்லை. அதுகுறித்து தகவல் எதுவும் வரவில்லையென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கூறிய அந்த தகவலின் அடிப் படையில் யாராவது இறந்திருக்கிறார்களா என்ற தகவல் அறிய வும் விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் சனிக்கிழமையன்று இறந்த தகவலைச் சொன்னேன். செத்துப் போன பிரச்சினையிலேகூட அதைக் கேட்டுத் தெரிந்து சொல் வதற்கு மூன்று நாட்கள் அவகாசம் தேவையா? கேட்கிறபோதே இறந்தார்களா இல்லையா என்று கேட்டு, எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்பதை உடனடியாகத் தெரிந்து சொல்ல முடி யாதா? இதிலே அரசு இவ்வளவு காலந்தாழ்த்துகிறதே என்று என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது குறித்து அரசு தெரிந்து சபைக்கு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, நேற்று இரவுகூட நான் அங்கேயிருந்த மருத் துவரோடு பேசியிருக்கிறேன். இன்று காலையில்கூட டி.எம்.எஸ். அவர்களை வரவழைத்து இது குறித்து சொல்லிவிட்டு வந்திருக் கிறேன். எனவே அரசு கவனம் செலுத்தவில்லையென்பது தவ றான கூற்றாகும். மேலும் இதை நான் விசாரித்தபோது, யாரும் இறந்திருக்கிறார்களா என்று கேட்டபோது இதுவரையில் தகவல் இல்லையென்று பதில் கிடைத்து இருக்கிறது. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்லிய கருத்து உண்மையாக இருக்கு மானால் மேலும் இதுபற்றி விசாரிப்பதற்காக முயற்சியெடுத்துக் கொள்கிறேன் என்று சொல்கிறேனே தவிர வேறல்ல. மாண்புமிகு உறுப்பினருக்கு வந்த செய்திகள் மட்டும் உண்மையாக இருக்கு மென்று சொல்லிவிட முடியாது. அங்கே பலபேர் இறந்திருக்க லாம். இறந்தவர்கள் காலராவால் இறந்தார்களா என்பதை அரசு தரப்பிலிருந்து நாங்கள்தான் கேட்டுப் பெறவேண்டுமென்ற காரணத்தால் அந்தச் செய்தியைப் பற்றி மேலும் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, காலரா பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிற நேரத்தில் மன்னார்குடியில் ஒரு சுகாதார அதிகாரி ஞாயிற்றுக்கிழமை, தான் பணிக்கு வர முடியாது என்று சொன்னதாகச் செய்திகள் கேள்விப்படு கிறோம். அப்படிப்பட்ட மக்கள் நலனைப் புறக்கணிக்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, யார் தங்களுடைய பணியிலிருந்து தவறினாலும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

3. கவன ஈர்ப்பு.

(அ) வெள்ளக்கிணறில் உள்ள கொங்கு நாடு கலை, அறிவியல், கல்லூரி மூடப்பட்டுள்ளதால் மாணவர்கள் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி மற்றும் யூ. கே. வெள்ளிங்கிரி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை வட்டம், வெள்ளக்கிணறு பேரூராட்சிக்கு உட்பட்ட கொங்கு நாடு கலை, அறிவியல் கல்லூரியை 1989 ஆம் ஆண்டு பிப்ரவரி 6 ஆம் நாள் முதல் நிர்வாகம் மூடிவிட்டதால், மாணவர் கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது :

அறிக்கை.

கல்லூரிகளில் ஏற்படும் மாணவர் பிரச்சினைகளுக்கு முடிவு காண உதவி புரிய ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு மாணவர் நலக் குழு நிறுவ 1979-ல் கல்லூரிக் கல்வி இயக்குநரால் ஆணையிடப்பட் டுள்ளது. இக்குழுவிற்கு கல்லூரி முதல்வர் தலைவராவார்.